**தமிழ் இணையக் கல்விக்கழகம்**
**சென்னை – 600 025.**

**CM00 சிகரம் (Cikaram)**

**இணையவழித் தேர்வு (Online Exam)**

**வினாத்தாள் அமைப்பு**

**நேரம் : 30 மணித்துளிகள்** **மதிப்பெண்கள்: 25**

**பகுதி – அ**
**கோடிட்ட இடத்தை நிரப்புதல்**

❖ பாடங்களில் உள்ள படிப்போம், இலக்கணம், செய்யுள் ஆகிய பகுதியிலிருந்து எவையேனும் பத்து வினாக்களைக் 'கோடிட்ட இடத்தை நிரப்புக' வடிவில் வினாக்கள் அமைக்கப்படும். (10x1 = 10 மதிப்பெண்கள்)

**பகுதி – ஆ**
**சரியான விடையைத் தேர்ந்தெடுத்தல்**

❖ பாடங்களில் உள்ள படிப்போம், இலக்கணம், செய்யுள் ஆகிய பகுதியிலிருந்தும் ஐந்து வினாக்கள் 'சரியான விடையைத் தேர்ந்தெடுப்போம்' என்ற வினாக்கள் வடிவில் அமைக்கப்படும். (5x1 = 5 மதிப்பெண்கள்)

**பகுதி – இ**
**பொருத்துதல்**

❖ பாடங்களில் உள்ள 'பொருள் அறிவோம்', 'அறிந்துகொள்வோம்' பகுதியிலிருந்து ஐந்து வினாக்களைப் 'பொருத்துக' வடிவில் வினாக்கள் அமைக்கப்படும்.
(5x1 = 5 மதிப்பெண்கள்)

**பகுதி – ஈ**
**சரியா தவறா எனக் குறித்தல்**

❖ பாடங்களில் உள்ள படிப்போம், இலக்கணம், செய்யுள் பகுதிகளிலிருந்து எவையேனும் ஐந்து வினாக்கள் சரியா? தவறா? வடிவில் வினாக்கள் அமைக்கப்படும்.
(5x1 = 5 மதிப்பெண்கள்)

******

**தமிழ் இணையக் கல்விக்கழகம்**
**சென்னை – 600 025.**

**CM00 சிகரம் (Cikaram)**

**எழுத்துத் தேர்வு (Written Exam)**

**வினாத்தாள் அமைப்பு**

**நேரம் : 3.00 மணி நேரம்** **மதிப்பெண்கள்: 75**

**பகுதி – அ**
**படித்தல் திறன்**

- ❖ பாடப்புத்தகத்தில் உள்ள கேட்டல் கருத்தறிதல் பகுதியிலிருந்து ஏதேனும் ஒரு பத்தினைக் கொடுத்து அதிலிருந்து ஐந்து வினாக்கள் கேட்கப்படும்.
(1x5=5 மதிப்பெண்கள்)

**பகுதி – ஆ**
**மொழிபெயர்ப்புப் பகுதி**

- ❖ பாடப்புத்தகத்தில் உள்ள மொழிபெயர்ப்புப் பகுதியிலிருந்து ஏதேனும் ஒரு தமிழ் பத்தியினையும் ஆங்கில பத்தியினையும் கொடுத்து மொழிபெயர்ப்பு வினா அமைக்கப்படும்.

  - ➢ தமிழிலிருந்து ஆங்கிலத்தில் மொழிபெயர்ப்புப் பத்தி (1x5=5 மதிப்பெண்கள்)
  - ➢ ஆங்கிலத்திலிருந்து தமிழில் மொழிபெயர்ப்புப் பத்தி (1x5=5 மதிப்பெண்கள்)

**பகுதி – இ**
**இலக்கணப் பகுதி**

- ❖ பாடப்பகுதியிலுள்ள இலக்கணப்பகுதியிலிருந்து மரபுத்தொடர்கள், இணைமொழிகள், உவமைத் தொடர்கள், நிறுத்தக்குறிகள், வல்லினம் மிகா இடங்கள், வல்லினம் மிகும் இடங்கள் ஆகிய பகுதியிலிருந்து ஒரு பத்தி வினா அமைக்கப்படும்.
(1x5=5 மதிப்பெண்கள்)

- ❖ பாடப்பகுதியிலுள்ள ஏனைய இலக்கணப் பகுதியிலிருந்து எட்டு வினாக்கள் கொடுத்து ஐந்து வினாக்களுக்கு விடை எழுதுமாறு வினா அமைக்கப்படும்.
(5x2=10 மதிப்பெண்கள்)

## பகுதி – ஈ
## படிப்போம் பகுதி

- ❖ படிப்போம் பகுதியிலிருந்து மூன்று பாடங்களுக்கு ஒரு வினா வீதம் ஐந்து வினாக்களுக்கு ஒரு சொல்/தொடரில் விடை அளிக்குமாறு வினா அமைக்கப்படும். (5x1 = 5 மதிப்பெண்கள்)

- ❖ பாடப்பகுதியிலிருந்து மூன்று பாடங்களுக்கு ஒரு வினா வீதம் எட்டு வினாக்கள் கொடுத்து ஐந்து வினாக்களுக்கு மூன்று வரிகளில் விடை அளிக்குமாறு வினா அமைக்கப்படும். (5 x 2= 10 மதிப்பெண்கள்)

- ❖ பெரு வினா: பாடப்பகுதியிலிருந்து ஏதேனும் மூன்று வினாக்கள் அமைத்து ஒரு வினாவிற்கு கட்டுரை வடிவில் விடை அளிக்குமாறு வினா அமைக்கப்படும். (1x10 =10 மதிப்பெண்கள்)

## பகுதி – உ
## செய்யுள் பகுதி

- ❖ செய்யுள் பகுதியிலிருந்து மூன்று பாடங்களுக்கு ஒரு வினா வீதம் எட்டு வினாக்கள் கொடுத்து ஐந்து வினாக்களுக்கு மூன்று வரிகளில் விடை அளிக்குமாறு வினா அமைக்கப்படும். (5 x 2= 10 மதிப்பெண்கள்)

## பகுதி – ஊ
## படைப்பாற்றல் திறன்

- ❖ படைப்பாற்றலை வளர்க்கும் விதமாகக் கடிதம், கட்டுரை, கவிதை போன்றவற்றை ஏதேனும் மூன்று தலைப்புகள் கொடுக்கப்பட்டு, அதில் ஒன்றினுக்கு விடை எழுதுமாறு வினா அமைக்கப்படும். (1x10 = 10 மதிப்பெண்கள்)

*****